1992 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 271 திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

271—கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கல்.

*3866 திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராதாபுரம் தொகுதி செட்டிகுளம் பஞ்சாயத்தில் ஸ்ரீரெங்கநாராயணபுரம் பகுதிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரெங்கநாராயணபுரம் பகுதிக்கு தண்ணீர் வழங்கும்பொருட்டு இது இராதாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் அனைத்து ஆய்வுப் பணிகளும் மார்ச்சு 1992-ல் முடிக்க குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற ஸ்ரீரெங்கநாராயணபுரம் செட்டிகுளம் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அங்கே ஒரு குடிநீர்த் திட்டம் இயங்கி வருகிறது. அதிலே இணைப்பது மிசு எளிதானது. அது உடனடியாக நடக்கக்கூடிய ஒன்று. அமைச்சர் அவர்கள் கூறுகிற கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல் படுத்தப்பட அதிக நாட்கள் ஆகும். எனவே அங்கே குடிநீரே அதிகமாக இல்லாத காரணத்தாலும், உப்பு நீரே கிடைக்கின்ற காரணத்தாலும் ஒரு எக்ஸ்டென்ஷன் அதாவது ஒரு கிலோ மீட்டருக்கு பைப்பை நீட்டித்து இரண்டு மூன்று பைப்கள் போட்டுத் தருவார்களேயானால் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தரக்கூடியதாக இருக்கும். அதற்கு ஆவன செய் வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : அரசு இது பற்றிப் பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 272, திரு. பி. வி. இராஜேந்திரன். இருக்கையில் இல்லை.

வினா எண். 273. திருமதி ப. சரஸ்வதி. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

1992 மார்ச் 19

சேலம் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பயிற்று விப்பு வழிகாட்டல் நிலையம்.

4388— திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா : —

(அ) திருச்சி கோயம்புத்தூர் நகரங்களில் உள்ளது போல வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தவருக்கான பயிற்றுவிப்பு வழிகாட்டல் நிலையம் சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் தோற்றுவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினருக்கானப் பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையம் ஒன்றை சேலம் மாவட்டத்திலும் தொடங்கலாம் என்று வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அனுப்பி யுள்ள செயற்குறிப்பு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த பயிற்சி இல்லாமல், வசதி இல்லாமல் வேலைவாய்ப்புகள் எந்தெந்தத் துறைகளில் வருகின்றன என் பதைக் கூட அறிய முடியாத அளவுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் அதிக மாக வாழ்கின்ற சேலம் மாவட்டத்தில் அடுத்த ஆண்டிலாவது இவற்றைத் துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல இது பற்றிய செயற்குறிப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்பட்டு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பரிசீலனையில் உள்ளது. கூடிய வரையில் இது பற்றிப் பரிசீலித்து அறிவிக்கப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா என். 27— திருமதி என். சி. கனகவல்லி. இருக்கையில் இல்லை. (குறுக் கீடு) திரு. சி. சுவாமிநாதன் கேட்கிறார். மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர்.